THE MADURA-RAMNAD DIOCESAN MAGAZINE

SATHIAVARTHAMANI

June, 1955

மதுரை-ராமநாதபுரம் அத்தியட்சாதீனத் தீபிகை

சத்தியவர்த்தமானி

ஜூன், 1955

மதுரை-ராமநாதபுரம் அத்தியட்சாதீனத் தீபிகை

பத்திராதிபர் :— A. சாமுவேல் ஐயர், செமினரி, பசுமலை,
மதுரை ஜில்லா.

உதவி பத்திராதிபர்:—C. S. தவமணி ஐயர், மண்டபம் கேம்ப்,
ராமநாதபுரம் ஜில்லா

மானேஜர் :—கனம் ஜாஷ்வா அவர்கள், மதுரை-ராமநாதபுரம்,
அத்தியட்சாதீன பொக்கிஷதார்,
211, தெற்கு மாரட் வீதி, மதுரை.

பதிப்பாளர் :—சங்கை C. P. ஹைனமென், லிருக்ஸ் பிரஸ், பசுமலை,
மதுரை ஜில்லா.

முக்கிய பொருளடக்கம்

1. அத்தியட்சரின் கடிதம்
2. திருச்சபைச் செய்திகள்.
3. சிறுவர் பாகம்.
4. பிரசங்கம்
5. இரக்ஷணிய யாத்திரீகம்
6. வேத வினாக்களுக்குரிய விடைகள்.
7. இயேசுவின் ஜெபப்பள்ளி.
8. கி.மு. சங்கப் பொருட்கள்.
9. வேத வினாக்கள்.
10. விளம்பரம்.

தென் இந்திய சபையைச் சேர்ந்த
மதுரை—இராமநாதபுரம் அத்தியட்சாதீனத்தின்
சத்திய வர்த்தமானி

புஸ்தகம் XVI பசுமலை, ஜூன் 1955 இலக்கம் 8

வருடசந்தா: 1 ரூ. தபாற்கூலி உட்பட.

அத்தியட்சரின் கடிதம்.

தல்லாகுளம், மதுரை,
(கேம்ப்) கொடைக்கானல்,
மே 17, 1955.

கிறிஸ்துவுக்குள் அன்புள்ள மக்களே:—

வேனிற்கால விடுமுறை நாட்களுக்குப்பின் உங்களிலனேகர் புது வருடப் பாடசாலை ஊழியத்தை ஆரம்பிக்கும் தருணம் இக்கடிதம் கிடைக்கும். விடுமுறை நாட்களால் நீங்கள் முசிப்பாறுதல் பெற்றிருப்பீர்களெனவும், வருகிற ஆண்டில் உங்கள் வேலையில் சந்தோஷப்படுவீர்களெனவும் நம்புகிறேன்.

பெரியகுளத்தில் ஜூன்மீ 12உ குருபட்டம் பெறப்போகும் மூவருக்காக நீங்கள் ஜெபிக்கும்படி கேட்கிறேன். அவர்களில் ஒருவர் கோம்பையில் உழைத்துவரும் கனம் எஸ். சி. பாக்கியநாதன். மற்றவர் மடத்தாகுளம் பாஸ்டரேட்டில் ஊழியம் பார்க்கும் கனம் ஸ்ரீனிவாசன். மூன்றுவது ஆள் அமெரிக்கன் கல்லூரியில் சேவை செய்யவரும் மிஷனரி கனம் எஸ். ஜி. மேக்கி மேற்கு லோக்கல் கவுன்சில் தலைவராக பொறுப்பேற்றிருக்கும் கனம் எல். பொன்னுச்சாமி ஐயரவர்களுக்காகவும் ஜெபிக்கும்படி உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இரண்டாவது ஐந்துவருடத் திட்டத்திற்காக சர்க்கார் கையாடி வரும் ஒழுங்கைத் தினசரிப் பத்திரிக்கைகளில் வாசித்திருப்பீர்கள் முதல் ஐந்துவருட தேசநலன் திட்டத்தில் விவசாய விருத்திக்கான பெரிய அணைகளும் இதர திட்டங்களும் அடங்கியுள்ளன. ஆனல் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் கிராமநல வாழ்வையும் விவசாயத்தையும் உயர்த்தும்

பல சில்லரைத் திட்டங்கள் அடங்கியுள்ளன. இதன் சம்பந்தமாய் சர்க்கார் ராமனாதபுரம் ஜில்லாவை பிரத்தியேகமாய்த் தெரிந்தெடுத்து கிராமங்கள்தோறும் சிறு கமிற்றிகளை நிறுவி வருகிறார்கள். அத்தியட்சாதீனமாக நாம் கிராம நலனுக்காகவும் வளர்ச்சிக்காகவும் செய்யக்கூடியதை அறிவுறுத்த நிர்வாகக் கமிற்றிமார் கனம் எஸ் ஜி. கிரப் ஐயரவர்களை நியமித்துள்ளார். கிறிஸ்தவர்களாகவும் தேசக் குடிகளாகவும இந்தப் பெரிய கைங்கிரியத்தில் சர்க்காரோடு உற்சாகமாய் ஒத்துழைப்பது நம் கடமையாகும். கிராமக் கமிற்றிகள் எல்லா சமுதாயத்தாருக்காகவும் சிறந்த பணியாற்றும்படி நீங்கள் உங்களாலான உதவியைச் செய்வீரகளென நம்புகிறேன். தேசம் முன்னுக்கு வருவதற்கு சாதகமாக நாம் சேவை செய்ய இது ஒரு சிறந்த சந்தர்ப்பமாகும்.

வருகிற ஆண்டில் செய்யும் ஊழியத்திற்குத் தகுந்த பெலனைக் கடவுள் உங்களுக்களிப்பாராக.

இப்படிக்கு,

கிறிஸ்துவுக்குள் உங்களன்புள்ள ஊழியன்,

லெஸ்லி நியூபிகின்,

அத்தியட்சர்.

அத்தியட்சரின் அலுவல்கள்

ஜூன் 5 வத்தலக்குண்டு, கம்பம்—குருமார் பாஸ்டரேட் பொறுப்பேற்றல்

10—12 குரு அபிஷேகம்—பெரியகுளம்

16—17 தாம்பரம்—அகிலலோக கிறிஸ்தவ மாணவர் கூட்டம்

18—19 மதுரை—ஸ்திரீகள் ஊழியர் கூட்டம்

19 இளந்தோப்பு சபை—திடப்படுத்தல்

21 சென்னை—விஞடு கமிற்றி

26 மதுரை—அமெரிக்கன் கல்லூரி ஆசிரியர் ஒடுக்கக் கூட்டம்

28 சென்னை—சுவார்ட்பள்ளி ஆசிரியா ஒடுக்கக் கூட்டம்

ஜூலை 2—3 திருப்புவனம் பாஸ்டரேட்—திடப்படுத்தல்

திருச்சபை செய்திகள்

1. சபையின் திருநாட்கள்.

ஜுலை	3	திரி. திரு. பின் ஞாயிறு	5
	10	,,	6
	17	,,	7
	22	பரி. மகதலேனு மரியாள் திருநாள்	
	24	திரி. திரு. பின் ஞாயிறு	8
	31	,, ,,	9

2. தெய்வீக அன்பு.

இயேசுகிறிஸ்துநாதரின் வாழ்க்கைத் திருக்காட்சி மறுபடியும் மேமீ 7உ பெரியகுளத்தில் நடைபெற்றது. இக்காட்சி தங்கள் நகரில் நடக்க வேண்டுமெனப் பெரியகுளவாசிகள் வேண்டுகோளிற்கிணங்கவே இது நடந்தது இதை சுமார் 2000 பேர் கண்டு களிப்புற்றனர். இதில் பங்கெடுத்த நடிகர்களுக்கு எமது நன்றி உரித்தாகுக.

3. செவல்பட்டி வருஷாந்திர ஸ்தோத்திரப் பண்டிகை.

“தென் லோக்கல் கவுன்சில் செவல்பட்டி சபையின் வருடாந்திர ஸ்தோத்திரப்பண்டிகை நாளது வருஷம் ஏப்பிரல்மீ 10உ ஞாயிறன்று ஸ்தலக் குரு சங்கை ஞானக்கண் தேவதாஸ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அன்று காலை 4 : 30 மணிக்கு ஈஸ்ற்றர் ஆராதனையும், நற்கருணை ஆராதனையும், மாலை வருஷாந்திர ஸ்தோத்திரப் பண்டிகையும நடந்தது ஆலயத்தின் முன்பாக அமைக்கப்பட்டுள்ள அரங்கத்தில் ஏலத்திற்கு வந்திருந்த பொருட்கள் ஏலத்திற்கு விடப்பட்டன. சபையார்களும் புறமதஸ்தர்களும் வந்து விழாவைச் சிறப்பித்தனர். கடந்த வருஷத்தை விட ஆவிக்குரிய விஷயத்திலும் காணிக்கை விஷயத்திலும் இச்சபையில் வளர்ச்சி காணப்பட்டது. சபையின் ஸ்தோத்திரப்பண்டிகை இவவருடம் ஒரு விழாவாகக் கொண்டாடப்பட்ட வைபவம் புறமதஸ்தர்களுக்கு சாட்சி பகரும் சந்தர்ப்பமாயிருந்தது எனக் கனம் ஜேம்ஸ் ஆசிரியர் எழுதுகிறார்.

4. தமிழ்நாட்டுக் கிறிஸ்தவ சங்கம்.

இதன் ஆதரவின் கீழ் ராமனுதபுரததிலுள்ள கமுதிப்பட்டணத்தில் மேமீ 5—14உ களில் முதியோர் கல்வி பயிற்சி முகாம் நடத்தப்பட்டது. இதில் முதியோர் கல்வி, விவசாயம், சுகாதாரம், குடிசைத் தொழில், கிராமபுனருத்தாரணம் ஆகிய பாடஙகள் கற்றுக் கொடுக்கப்பட்டன. ஏராளமான ஆசிரியரான ஆண்களும் பெண்களும் இதில் பங்கு பெற்றனர்.

5. நெசவுச் சேலைகளும் வேஷ்டிகளும்

நமது அத்தியட்சாதீன கிராமத்தில் நெசவு செய்யப்படும் சேலை (7, 6 கெஜம்) வேஷ்டிகள் (4, 4½, 7, 8 முழம) இப்போது பசுமலை

சென்டரில் விற்பனைக்குத் தயாராயிருக்கின்றனவென்று அத்தியட்சாதீன கிராம ஊழியர் கனம் செல்லப்பா எழுதுகிறார்.

6. கிறிஸ்தவக் குடும்பப் பண்டிகைக் கொண்டாட்டவாரம் கோடைக்கானல்

கொடைக்கானல் திருச்சபையில் கிறிஸ்தவக் குடும்பப் பண்டிகை ஏப்ரல் 11—17 வரை கொண்டாடப்பட்டது. இதில் பங்குபெற்ற குடும்பங்கள் தாங்கள் கிறிஸ்தவக் குடும்பங்களாய் இருக்கப் பெற்ற சிலாக்கியத்தையும் இதன் மேன்மையையும் நன்குணரக் கர்த்தர் கிருபை செய்தார்.

குடும்பத்தில் சுத்தம், உண்மை, ஐக்கியம், பிள்ளைகள் முதலிய பல பொருட்களில் கூட்டங்கள் நடைபெற்றன. கடவுளை ஆராதிக்கும் முறைகள் பிள்ளைகளுக்கும் தகுந்த முறையில் போதிக்கப்படவேண்டும். பக்தியுள்ள கிறிஸ்தவக் குடும்பங்களே குட்டிச சபைகள். இப்படிப்பட்ட குடும்பங்களாலானவையே திருச்சபைகள்.

கிறிஸ்தவக் குடும்பங்கள் பண விஷயத்தில் கவலையும் உண்மையும் உள்ளவைகளாய் கடவுளுக்கொரு பாகத்தைக கொடுத்து செலவு செய்தால் கர்த்தருடைய ஆசீர்வாதத்தைப் பெறலாம்.

இயேசு ரட்சகர் தமது முதலாம் அற்புதத்தைக் குடும்ப நல்வாழ்வுக்கும் சிறப்புக்கும் செய்தார். பெற்றோர் பிள்ளைகளையும், பிள்ளைகள் பெற்றோரையும் மதித்துக் கனம்பண்ணி வாழ்ந்து, குடும்பத்தை நடத்தும் பொறுப்புகளில் எலலோரும் பங்குபெற்று ஆவலோடும் சந்தோஷத்தோடும் நிறைவேற்றினால் குடும்பம் மகிழ்ச்சி கொடுக்கும் ஒரு ஸ்தாபனமாகும்.

சிறுவர்கள் தாங்களே பல காரியங்களைச் செய்யவும் பாடவும் ஜெபிக்கவும் தூண்டி அவர்களைப் பல துறைகளிலும் முன்னேற்றி குடும்பத்துக்கு ஆபரணங்களாக்கி அவர்களும் அலங்காரமான குடும்ப ஜீவியம் செய்ய பெரியோர் தூண்டவேண்டும். அப்பொழுது பயபக்தியும் சன்மார்க்கமும் சந்தோஷமும் குடும்பங்களில் பெருகும் என்ற சத்தியங்கள் வற்புறுத்தப்பட்டன.

பெற்றோரும், பிள்ளைகளும் ஒருவரையொருவர் நேசிக்கவேண்டிய அவசியமும், குடும்பத்தில் செய்யவேண்டிய பல அலுவல்களைக் குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரும் பொறுப்பேற்றுச செயவதால், எல்லோருக்கும் இளைப்பாறுதலும் சந்தோஷமும் ஐக்கியமும் உண்டாகுமென்றும், குடும்ப வருவாயைப் பெருக்க யாவரும் முயற்சிப்பதால் குடும்பப் பொருளாதார நிலைமை உயருமென்றும் சினிமாப் படக்காட்சியின் மூலமும், கிறிஸ்தவக் குடும்பக் கூட்டுறவினால் பெரிய காரியங்களை ஆண்டவருக்கென்று செய்யலாம் என்ற சத்தியமும் 3 மைல்களுக்கப்பால் காடிச் சோலைக்குள் மலையருவியினருகில் போய்ச் சேர்ந்து வனபோஜனம் அருந்திய அநுபவம் பேரும் உணர எதுவாயிருந்தது.

இந்த வைபவத்தை யொட்டி ஆயத்தம் செய்யப்பட்டிருந்த பொருட் காட்சி—குடும்பத்தில் குறைந்த செலவில் தயாரிக்கப்பட்டும், அதிக காலம் உபயோகிக்கப்படத்தக்கதுமான உறுதியான சிறுபிள்ளைகளுக் கேற்ற விளையாட்டுச சாமான்களும், அழகுள்ளதாய்த் தைக்கப்பட்ட சிறு வர் சிறுமியர்க்கேற்ற உடைகளும், குடும்பத்திற்கேற்ற பாட்டு, ஜெப, தியானப் புத்தகங்களும், பாலியரையும் வாலிபரையும் பெரியோரையும் பரிசுத்த குடும்ப ஜீவியத்துக்கு ஆயத்தம் செய்யும் புத்தகங்களும், வேதாகமங்கள், பலவித கீர்த்தனை, ஆவிக்குரிய பாடல் புத்தகங்களும், வீடுகளில் தொங்கவிடக்கூடிய வேதாகம வசனங்களும் படங்களும், குடும்பத்தில் உபயோகப்படுத்தககூடிய லேசான மருந்துகளும், பல முதலுதவிச சாதனங்களும், யாவரும் எளிதில் தயாரிக்கக்கூடியதும, உடம்புக்கு ஆரோக்கிய மும் பலமும் போஷணையும் தரக்கூடியவைகளுமான ஆகாரமான வகைகளும் வைக்கப்பட்டது—அநேகருக்குப் பலவிதததில் குடும்ப ஜீவியம் ருசிகரமாய் நடத்துவதற்கு உதவியாயிருந்தது. திருச்சபை அங்கததினரில் சிலர் வேதபாடப் பரீக்ஷையில் கலந்துகொண்டனர்.

முடிவுத் தீபாராதனையில் திருச்சபை அங்கத்தினர் குடும்பம் குடும்பமாய் உட்கார்ந்து தனிஜீவியததிலும், பிள்ளைகள் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து நடப்பதில் பயிற்றுவிப்பதிலும், அன்பும் பரிசுத்தமுமுள்ளவர்களாய் அனைவரும் ஜீவிப்பதிலும், ரக்ஷகரைப் பார்க்க விரும்புகிறவர்களுக்கு குடும்பமாய்க் காட்டலாம் என்று உணர்த்தும் செய்தியை உணர்ந்து கொண்டாடியது பெரிய உற்சாகத்தை மூட்டியது

இந்த ஆராதனை முடிவில் கீழ்க் குறிப்பிட்டுள்ள ஜெபம் தடித்த அட்டையில் அச்சிடப்பட்டு அனைவர்க்கும் கொடுக்கப்பட்டது.

என் வீட்டுக்காக ஜெபம்.

'பிதாவே, நாங்கள் நேசிக்கிற வீட்டின் சுற்றுச் சுவர்களாகவும் மேல் கூரையாகவும் இருந்து ஆசீர்வதியும்.

வேலை, விளையாட்டு, அன்பு, சந்தோஷம் முதலியவற்றால் இப்பொழுதும் இனிவரும் சகல நாட்களிலும் இவ்வீட்டைச் சந்தோஷப்படுத்த எங்களுக்கு உதவி செய்யும்.

பரம பிதாவே, எங்கள் வீட்டாரையும் குடும்பத்தாரையும் ஆசீர்வதியும் ஆமென்.

ஆண்டவர் இந்தக் கிறிஸ்தவக் குடும்பப்பண்டிகை மூலமாய் இத் திருச்சபையின் அநேகக் குடும்பங்களுக்கும், தனிததனி அங்கததினருக்கும் விசேஷித்த எழுப்புதலைத் தந்ததற்காகக் கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறோம் எனக் கனம் உல்லியம்ஸ் ஐயர் அறிவிக்கிறார்.

7. கிறிஸ்தவ சமுதாய பொருளாதார அபிவிருத்திக்கான மகா நாடுகள்.

சென்ற மாத சஞ்சிகையில் குறிப்பிட்ட அகில இந்திய கிறிஸ்தவ பொருளாதார அபிவிருத்தி மகா நாடு இவ்வருடம் செப்டம்பர் மாதம் 6-ம் தேதி முதல் 9-ம் தேதி வரையில் உத்தரப்பிரதேசத்தில் காசிபாத்

என்றவிடத்தில் கூடுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழ் நாட்டு மகா நாடு சம்பந்தப்பட்ட ஒழுங்குகள் திருச்சபை, கிறிஸ்தவ ஸ்தாபனங்களின் தலைவர்கள் கொடுக்கக்கூடிய ஆலோசனைகள், ஆதரவு இவற்றைச் சார்ந்திருப்பதால் நாளடைவில் அறிவிக்கப்படும். ஜூலை இறுதில் அல்லது ஆகஸ்டு மாத முதலில் கர்த்தருடைய சித்தத்திற்கிசைய நடைபெறும்.

கிராமத் திருசசபைகளில் உள்ள ஆயிரக்கணக்கான ஏழை மக்கள் பிணி, வறுமை வருவாய் குறைவு. வேலையின்மை, முதலிய நிர்ப்பந்தங்களில் அல்லலுறுவதைப் போக்க பலதரப்பட்ட செல்வாக்குள்ள மக்கள் தங்களாலியன்றதைச் செய்வதே தேவ சித்தமாகும் என்பதற்கு ஐயமில்லை.

தமிழ் நாட்டின் பல விடங்களில் நடந்துவரும் பொருளாதார அபிவிருத்திவேலைகளைக் கண்காணிக்கும்படி 1954-ம் வருஷம் நியமிக்கப்பட்ட சர்வே கமிஷன் யதாஸ்தில் ஒவ்வொரு சேகரமும் பூரணமான சர்வே எடுப்பது அவசியமென்று ஆலோசனை கூறியுள்ளது. அது இன்றியமையாதது. ஆனால் இவ்வருட மகாநாடுகளுக்கு உதவும்படி அப்பெரிய தொண்டை செய்து முடிப்பது சாத்தியமல்ல. ஆகவே திருசசபைகள் வரை யறுக்கப்பட்ட ஒரு குறுகிய எல்லைக்குள் தீவிரமாய் வேண்டிய புள்ளி விவரங்களை எடுத்துக் கொள்வது சால சிறந்ததாகும் Area Council அல்லது District Committee என்று அழைக்கப்படும் வட்டாரத்துக்குள் இவ்வூழியம் செய்து குறிப்புகளை சேகரிக்கலாம்.

அவரவர்கள் தங்கள அனுபவங்களுக்கேற்றபடி ஒரு பட்டி (Questionnaire) தயாரித்துக் கொள்ளலாம் ஆலோசனைகள் வேண்டுபவர்கள் எமக்கு எழுதலாம்

சற்றேறக்குறைய பத்து வருடங்களுக்கு முன் இருவர் செய்த இத்தகைய வேலை சகலருக்கும் உதவக் கூடுமென்று இங்கு வரைகிறோம்.

கோயம்புத்தூர் ஜில்லா போத்தனூருக்கடுத்த கிணற்றுக் கடவை அணைத்துள்ள கருணைகரபுரி என்னும் தமிழ் சுவிசேஷ லுத்திரன் திருச்சபை போதகர் மறை திரு G ஸ்டீபன் ஐயரவர்கள் 1954-ம் வருஷம் மே மாதம் அத்திருச்சபையின் மகா சபைக்கூட்ட மொன்றில் ஒரு சிகரமான யதாஸ்தை சமர்ப்பித்தார்.

அதன் சாராம்சமாவது:—மேற்படி சபை சம்பந்தமான 52 பாஸ்டரேட்டுகளில் 13 சுய ஆதரிப்பில் உள்ளன. மற்றும் பதின் மூன்று சேகரங்கள் சுய ஆதரிப்பின் எல்லையை நோக்கி வருகின்றன. மீதி 26 பாஸ்டரேட்டுகள் தரித்திரதசையில் உழலும் சபையார் நிறைந்தவை அவ்வைம்பத்திரண்டு பாஸ்டரேட்டுகளிலும் உள்ள ஜனத்தொகை 43,324 பேர்கள். இவர்களில் ஐந்தில் மூன்று பாகத்தார் வறுமையில் உழலுபவர். அவர்களுள் பன்னீராயிரம பேர்கள் பலவித தொழில்களில் ஈடுபட்டு பொருளீட்டுபவர்கள் சற்று சமாளித்து கொள்ளக்கூடிய நிலைமையிலிருப்பவர்கள். தமிழ் நாட்டில் ஏழு ஜில்லாக்களில் இத்திருச்சபை சேவை புரிகிறது. அவைகளில் சற்று உயர்ந்த ஜாதி எனப்படும் நடுத்தர வகுப்பாளர் உளர்.

தற்சமயம் சித்தூர் ஜில்லாவில் நாஹரிப்பேட்டை என்னும் இடத்தை தலை ஸ்தாபனமாகக் கொண்டு வட காட்பாடி போதகராக விளங்கும் கனம் மறை திரு J. சாம் பொன்னையா ஐயா பொருளாதார சேவையில் முன் னணியில் நிற்பவர். அவர் சித்தூர் தாலுக்காவில் 14 கிராமங்களில் செய்த விசாரணையின் பலன்களை சுருக்கமாக எழுதுவது பிரயோஜனமாயிருக்கும்.

மேற்படி கிராமங்களில் சேரிகள் என்றழைக்கப்படும். கிராமப் பிரிவுகளில் மொத்த ஜனத்தொகை 2,376 பேர்களாவர் அவர்களில் 376 குடும்பங்களடங்கிய 1765 பேர் கிறிஸ்தவர்கள் 228 பேருக்கு கொஞ்சம் நிலம் உண்டு. 3 முதல் 5 ஏக்கர் வரையில் நிலமுள்ளவர்கள் வெகு சொற்பம். பெரும்பாலார் ஒன்று அல்லது இரண்டு ஏக்கர் உள்ளவர் கள் நீர்ப்பாசன வசதி அற்றவை. 322 குடும்பங்கள் கூலி ஜீவனத்தால் பிழைக்க வேண்டியவர்கள் குடும்பத்தின் தலைவர்களான 36 பேர்கள் ஆண்டை மாருக்கு கடன் பட்டு அடிமை வாழ்மை ஏற்றவர்கள்.

அவர்களில் வறுமைக்கும் வறுமைக்குக் கொஞ்சம் மேற்பட்ட கடுவில் ஊசலாடுகிறவர்கள் 71 குடும்பங்கள்.

இப்பதினான்கு கிராமங்களிலும் கிறிஸ்தவ பண வேலவா தேவிக்காரர்கள்	5 பேர்
க்டன் சுமையை குறைக்க வழியின்றி நெருக்கடி படுபவர்கள்	246 பேர்
1765 பேர்களில் குடிசை கைத் தொழில்களில் ஈடுபடுபட்டவர்கள்	19 பேர்
கிராமங்களிலுள்ள உழைப்பு மாடுகள்	574
வெள்ளாடு அல்லது மற்ற வகை ஆடுகள்	588
போர்டிங் பாடசாலைகள், தங்கிப் படிக்கும் மாணவர்கள்.	23
படிக்கும் மாணவிகள்.	19

நூற்றுக்கு 70 சதவிகிதம் கிறிஸ்தவப் பையன்களும் பெண்களும் பள்ளி யில் படிக்கின்றனர். ஆனால் பெரும்பாலார் 3 அல்லது நான்காவது வகுப்பு எட்டியதும் நின்று விடுகின்றனர். தங்கள் வறுமை, பணமுடை காரண மாய் ஸ்தாபனங்களின் சகாயக்குறைவு இக்நிலைமைக்கு காரணங்களாகும்.

கனம் மறை திரு. J. சாம் பொன்னையா அவர்கள் சில விடங்களுக்கு முன் கிறிஸ்தவ பொருளாதார கமிட்டி நடத்திய மகாநாடு ஒன்றில் வட ஆற்காடு ஜில்லா குடியேத்தம் தாலூகா குளித்தகை என்னும் கிராமத்தில் உள்ள அக்கால நிலைமையைப்பற்றி விவரித்தார். அப்போது அவர் அங்கு உபதேசியாராக பணியாற்றினார் இதன் சேரிப்பகுதியில் உள்ள மக்கள்

அனைவரும் கிறிஸ்தவர்கள். மற்ற அநேக கிராமங்களைவிட அது சற்று நல்ல நிலைமையிலுள்ளது

அவர் தந்த குறிப்புகள் :—303 நபர்கள் அடங்கிய 73 குடும்பங்கள் அவர்களில் 51 சத விகிதம் ஸ்திரீகள், 56 சத விகிதம் சம்பாதிக்கக்கூடிய வர்கள்.

அவர்களில் 40 ஆண்களும் 63 பெண்களும் சுத்தமாய் படிப்பறியாத வர்கள்.

சற்று படித்து மறந்தவர்கள்	33
பள்ளியில் சேர்ந்து படிக்கும் வயதுள்ள மாணவர்கள்	51
பள்ளியில் சேர்ந்து படிப்பவர்கள்	30

வெற்றிலை, கரும்பு பயிர் செய்பவர்கள் ஆண்களுக்கு கூலி ரூபாய் ஒன்று முதல் 1-4-0 வரையில். பெண்களுக்கு எட்டணு முதல் 10 அணு வரை யில் (இக்கூலி விகிதம் யுத்தக்காலத்துக்கு முன் அமுலிலிருந்தவை.)

மழை காலத்தில் வேலை கிடைப்பது துர்லபம், முழுப்பட்டினி, அரைப் பட்டினி காரணமாக பலக்குறைவு, வியாதிகள் சாதாரணம். இவைகள் அகால மரணத்துக்கு சாதகமானவை.

இக்குறிப்புகள் சாதாரணமாய் நமது தமிழ் நாட்டுக் கிராமங்களின் நிலைமையை நமக்கு காட்டுகின்றன கிறிஸ்தவ திருச்சபை தலைவர்கள் இப்பேர்பட்ட விசாரணைகள் நடத்தி அவ்வறிக்கைகளை அனுப்ப பணிவுடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கர்த்தர் தாமே நமது பிரயாசங்களுக்கு தக்கபலன் அளிப்பாராக.

முகாம் காட்பாடி.
7—5—57.

இப்படிக்கு
தமிழ்நாடு கிறிஸ்தவ கவுன்சில்
பொருளாதார கமிட்டியின் பேரால்;
பவுல் மூ. கோபாலகிருஷ்ணன்
செயலாளன்.

---

8. அத்தியக்ஷாதீன இளைஞர் ஊழியத்தின் ஏப்ரல் மாதத்திய அறிக்கை

கர்த்தருடைய பெரிதான கிருபையால் இந்த மாதம் 3-ம் தேதியன்று, மதுரை பரிசுத்த ஜியார்ஜின் ஆலய ஓய்வுநாட் பாடசாலைக்குச் சென்று, அதன் ஊழியத்தில் கலந்துகொண்டேன். அமெரிக்கன் கல்லூரி ஆசிரி யர் ஒருவர் ஈண்டுழைப்பது பாராட்டத்தக்கது.

9ம் தேதியன்று தெய்வாதீனமாக சிவகங்கை செல்ல நேரிட்டது. ஈஸ்டர் அன்று மேற்படியூர், ஓய்வுநாட் பாடசாலை மாணவரிடை, ஊழியம் செய்து, இரவில், ஒளிச்சித்திர படக்காட்சியும் நடத்தப்பட்டது.

11ம் தேதி இராமநாதபுரம் சென்று அப்பாஸ்றரேட்டைச் சேர்ந்த, புதுக் கோவிலூரில், 12ம் தேதியன்று ஊழியம் நடப்பிக்கப்பட்டது. ஈண்டு சீக்கிரத்தில் ஓர் ஓய்வுநாட் பாடசாலை உருவாக விருப்பது கண்டு சந்தோஷிக்கிறேன்,

13ம் தேதியன்று, மதுரைக்குத் திரும்பி 14ம் தேதி, மதுரை பரிசுத்த ஜியார்ஜின் ஆலய, மிஷனெரிப் பரப்பான இறுக்கன் குடியில், சிறுவருக்கென்று ஓர் ஒளி விசித்திரப்படக்காட்சி காண்பிக்கப்பட்டது. பின்னர் 15ம் தேதியன்று மம்சாபுரத்திலும், 16ம் தேியன்று நல்லான்செட்டிபட்டியிலும் மேற்படி படக்காட்சி காண்பிக்கப்பட்டது. 17ம் தேதி ஞாயிற்றுக் கிழமையன்று, நல்லான்செட்டிபட்டி, சிறுவருக்கென்றோர் ஆராதனை நடத்தி, ஓயவுநாட்பாடசாலை ஸ்தாபிக்க ஆலோசனை தரப்பட்டது. அதே ஊரில் ஓர் வாலிப சங்கமும் உருவாக்கப்பட்டது.

24ம் தேதி ஞாயிறு காலையில், மதுரை கீழவாசல் ஆலயத்தில் பிரசங்கித்து, ஓய்வுநாட்பாடசாலை மாணவருக்கும் போதனைகள் தரப்பட்டது.

கடந்த சில நாட்களாக மதுரை லேடி டோக் கல்லூரியில் நடைபெற்று வரும் விடுமுறைகால வேதாகம பாடசாலைபற்றி ஈண்டு குறிப்பிடாதிருப்பது முடியாது, சகோதரன் சாமுவேல், கோஷ்டியார் மேற்படி பாடசாலையை, அத்தியக்ஷாதீன இளைஞர் ஊழியக் குழுவின் உதவியால் நடத்திவருகிறார்கள். மதுரை பசுமலையைச் சேர்ந்த சுமார் 500 ஆண், பெண், சிறுவர்கள் இதில் கற்று பயன அடைந்து வருகிறார்கள். இதுபற்றிய முழு விபரமும் கர்த்தருக்குச் சித்தமானால் அடுத்த மாதம் அறிக்கையில் வெளியாகும்.

நமது அத்தியக்ஷாதீனத்தின் மற்றொரு முக்கிய கேந்திரமாகிய, இராமநாதபுரத்திலும் இத்தகைய பாடசாலை ஒன்று நடத்தப்பட்டது ஆண்டவர் இந்த காலங்களில், இளைஞரை சந்தித்து அழைக்கிறார் என்பதற்கு இவை அத்தாட்சியாகும்

வாலிபராய் ஊழியம் செய்த அவருக்கே சகல மேன்மையும், கனமும் சதாகாலங்களிலும் உண்டாவதாக.

இப்படிக்கு,
இளைஞர் மத்தியில் உங்கள் ஊழியன்,
சா. ஜூலியஸ்

தல்லாகுளம்
10—5—55

எனது ஜூன் மாதத்திய சுற்றுப்பிரயாண விபரம்.

ஜூன்	4—7	தேனி பாஸ்டரேட்
,,	11—13	திருமங்கலம் ,,
,,	18—20	பெரியகுளம் ,,
,,	25—27	ஒட்டன்சத்திரம் பாஸ்டரேட்

சிறுவர் பாகம்

(கனம் தவமணி ஐயர், மண்டபம் கேம்பு)

ருசியாநாட்டு முதல் அரசராகிய **நிக்கோலஸ்** என்பவர் மாறுவேடம் பூண்டு, தம் இராணுவத்தைச் சுற்றிப்பார்த்து வருவதுண்டு அவருடைய நண்பர் ஒருவரின் மகன் அவருடைய இராணுவத்தில் வேலைபார்த்து வந்தான். இராணுவ வீரருக்குச் சம்பளம் கொடுக்கும் பதவி அவனுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது அந்த வாலிடன் பல தீய பழக்கங்கள் உடையவனுஞன். சூதாட்டதில் தன் உடைமைகளையெல்லாம் இழந்தான். பிறகு அரசாங்கததின் பணத்தை எடுத்துச் செலவழித்துவிட்டான். கொஞ்சம் கொஞ்சமாக எடுத்துவந்ததால் எவ்வளவு எடுக்கப்பட்டதென்பதை அறியாதிருந்தான் கணக்குகளைச் சோதித்துப்பாாப்பவர் வரப்போகிறார் என்ற செய்தி ஒருநாள் வந்தது. அச்செய்தி வந்தசற்கு மறுநாள் சோதிப்பவர் வரும்நாள் அன்றிரவு அவ்வாலிபன் கணக்குப் புஸ்தகங்களை எடுத்து வைத்துக்கொண்டு கணக்கு முடித்தான் பணப்பெட்டியைத் திறந்து அதிலிருந்த சொற்பப் பணத்தையும் எண்ணிப்பார்த்து எழுதினான். தான் செலுததவேண்டிய தொகையை கழித்துப் பார்த்தான். ஒரு பெரிய தொகை அவன் கொடுக்கவேண்டியதாயிருந்தது அதைக்கண்டு திடுக்கிட்டான் "**இத்தொகையை யாராலே கொடுக்க முடியும?**" என்று தனக்குள் சொல்லிக்கொண்டே அவ்வாக்கியத்தை அத்தொகைக்குக் கீழே எழுதிவிட்டான். தன்னால் அதைக் கொடுத்துத் தீர்க்கமுடியாது என்பதை அறிந்தான் "ஐயோ! நான் அழிந்தேனே. இந்த அவமானத்தை எவ்வாறு பொறுப்பேன்? நாளைக்குக் காலையில் இப்பணத்தைக் கொடுப்பது எப்படி?" என்று கூறிககொண்டு இனி உயிர் வாழ்ந்திருப்பதில் பயனில்லை என்ற முடிவுக்கு வந்தான் நள்ளிரவில் துப்பாக்கியால் தன்னைச் சுட்டுத் தற்கொலை செய்துகொள்ள வேண்டுமென்று தீர்மானிததான். அதைப் பற்றிக் கவலையுடன் சிந்தித்துக் கொண்டிருக்கவே தூக்க மயக்கத்தால் மேஜைமீது படுத்துறங்கிவிட்டான்.

அன்றிரவு **நிக்கோலஸ்** ஒரு சாதாரண உத்தியோகஸ்தன் போல உடுத்திக்கொண்டு அவனிருந்த கோட்டையினுள் நுழைந்து ஒவ்வொரு அறையையும் பார்த்துவந்தார், அவர் வந்த நேரத்தில் விளக்குகளெல்லாம் அணைக்கப்பட்டிருக்கவேண்டும். ஓர் அறையில் மாத்திரம் வெளிச்சம் தெரிந்தது. கதவண்டை சென்று பார்த்தார். உள்ளே சத்தமில்லை. பின் மெதுவாகக் கதவைத் திறந்துகொண்டு உள்ளே சென்றார் தூங்கும் வாலிபனைக் கண்டார் முன்னால் கணக்குப் புத்தகமும் பேனாவும் இருந்தன. பணப்பெட்டி திறந்த வண்ணம் இருந்தது ஒரு தாளில் கணக்கு எழுதப்பட்டு அதன்கீழ் "**இத்தொகையை யாரால் கொடுக்க முடியும்?**" என்றெழுதியிருந்ததைக் கண்டார். நடந்த செய்தி எல்லாவற்றையும் ஊகித்தறிந்தார். உடனே அவனைக் கைதுசெய்துவிடலாமென்ற எண்ணம் உதித்தது. ஆனால்; அவனுடைய தந்தையின் நினைவு வரவே அவ்விதம் செய்யவில்லை. தன் மகன் கைது செய்யப்பட்டான் என்பதைக் கேட்கும் தந்தையின் மனம் வருந்துமே என நினைத்தார். அவனுடைய குழந்தைப்பருவம் பிள்ளைப்பருவம் அவ்வற்றில் நடந்த காரியங்கள் எல்லாம் ஞாபகத்திற்கு

வந்தன இத்தொகையை யாராலே கொடுக்கமுடியும்?" என்ற வார்த்தைகள் மீண்டும் கண்களில் பட்டன. இளைஞன் மீது இரக்கங்கொண்டு அங்கிருந்த பேனாவை எடுத்து அவ்வாக்கியத்தின்கீழ் ஒரு வார்த்தையை எழுதிவிட்டு, மெதுவாய் வெளியேறிக் கதவை அடைத்துவிட்டுப் போனார்.

சிறிது நேரங்கழித்து வாலிபன் எழுந்தான். மணி பன்னிரண்டிற்கு மேலாயிற்று உடனே கைத்துப்பாக்கியை எடுத்துத் தலையில் வைத்துச் சுடப்போனான் அந்நேரத்தில் மேஜைமீதிருந்த தாளைப் பார்த்தான். அதில் ஒரு வார்த்தை புதிதாய் இருப்பதைக் கண்டான். அவன் எழுதாததைக் காணவே தாளைக் கையிலெடுத்து வாசித்தான். நிக்கோலஸ் என்றிருந்தது. அது உண்மையாயிருக்க கூடுமோவென்று சந்தேகித்தான். பின் நிக்கோலஸ் கையெழுத்துள்ள வேறு தாள்களை எடுத்து கையெழுத்தை ஒத்துப்பார்த்தான் அது உண்மையாகவே நிக்கோலஸ் கையெழுத்தெனக் கண்டான் அவர் இரவில் தன் அறைக்கு வந்திருக்கவேண்டுமென்று ஊகித்தறிந்தான் தன் குற்றமெல்லாம் தெரிந்தும் பணத்தைக் கொடுக்க கையெழுத்திட்ட அரசருடைய இரக்கத்தை நினைத்து நினைத்து மகிழ்ந்தான். துப்பாக்கியை கீழே வீசியெறிந்தான். "என் கடன் தீர்ந்தது" என்று கூத்தாடினான். அரசரின் வாக்கை நம்பினான். மறுநாட் காலையில் அவன் பட்ட கடன் எவ்வளவோ அத்தொகை அரண்மனையிலிருந்து வந்தது. அதை வாங்கிப் பணப்பெட்டியில் பூட்டிவைத்தான். கணக்குச சோதிப்பவர் வந்தார், எல்லாம் சரியாயிருந்ததைக் கண்டார் கண்ணை இழந்தவன் மீண்டும் அதைப்பெற்றவன்போலிருந்த அந்த வாலிபன் அரசனின் பெரிய இரக்கத்தை என்றும் மறவாமல் அதற்குப்பின் தன் வாழ்க்கையைச செவ்வைப்படுத்திக் கொண்டான்

நிக்கோலஸ் கடனை முழுவதையும் அவனுக்காகக் கொடுத்தார். இயேசு கிறிஸ்து பாவிபட்ட கடனை முற்றுமுடியக் கொடுத்துத் தீர்ப்பதற்கு இது ஒரு உவமை அந்த வாலிபனுக்கு உயிரளித்தது நிக்கோலஸ் என்ற ஒரு வார்த்தை. நமக்கு உயிரளிப்பது இயேசு என்ற ஒரே நாமம் அவருடைய பலியினால் நம் கடன் முற்றும்முடியக் கொடுத்துத தீர்க்கப்பட்டது இதை நம்புவோமாக. அவரைப் பற்றுவோமாக. (எபி. 7 : 25)

(— உயிர்மீட்சி)

பிரசங்கம்

(கனம் ஸ்டீவன்சன் ஐயர், சிவகங்கை)

லூக்கா 16 : 5....நீ என் எஜமானிடத்தில் பட்ட கடன் எவ்வளவு?....

கிறிஸ்தவன் ஒவ்வொருவனும் தன்னைத்தானே சோதித்துப்பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறான் நான் என் பரம எஜமானிடத்தில் பட்ட கடன் எவ்வளவு என்று ஆராய்ச்சிசெய்யவேண்டிய காலம். நாம் என்னென்ன வகையில் கடன்பட்டிருக்கிறோம்?

1. **அன்பாகிய கடன்** :—தேவன் சரீரப்பிரகாரமாகவும் ஆத்துமப் பிரகாரமாகவும் நமக்கு நன்மையை வழங்கியிருக்கிறார். நாம் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு தம்முடைய ஒரே பேறான குமாரனை நமக்குக் கொடுத்திருக்கிறார். அவருடைய குமாரனாகிய இயேசுவோ, தன் ஜீவனை நமக்காக சிலுவையில் ஒப்புக்கொடுத்தார். இவைகளை நினைக்கும்போது நான் தேவனுக்கு அன்பைக் காட்டியிருக்கிறேனா? அந்த நன்மைகளினால நான் தேவனுக்கு கடன்பட்டவனல்லவா? நீ என்னில் அன்பாயிருக்கிறாயா, என்னை நேசிக்கிறாயா என்ற கேள்விக்கு நான் என்ன பதிலைக் கூறக்கூடும்.

2 **ஜீவியமாகிய கடன்** :—இயேசு தேவனைக் காட்டினார் என்னைக் கண்டவன் என் பிதாவைக் கண்டான் என்று சொன்னார். அவர் பரிசுத்த ஜீவியம் செய்து பிதா பரிசுத்தமுள்ளவர் என்பதைக காட்டினார் இவ வகையில் தேவனுக்கென்று பரிசுத்த ஜீவியம் செய்யக் கடன்பட்டிருக்கிறேன். கடந்த ஜீவியத்தைப் பார்க்கும்போது களியாட்டிலும் சிற்றின்பத்திலும் மனம் போனபோக்கிலுமல்லவா நடந்து வந்தேன் பரிசுத்தத்தை வாஞ்சிக்க என் மனம நாடக்கூடாததாக இருந்திருக்கிறது. ஆனால் பரிசுத்தமாக ஜீவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன் என்பதை திரும்பவும் உணர்ந்து, தேவனிடத்தில் மன்னிப்பு கேட்பதுதான் புத்தி. பழைய மனுஷனைக் களைந்துவிட்டு புதிய மனிதனைத் தரித்துக்கொள்வதே நமது இலக்கு.

3 **ஊழியமாகிய கடன்** —என் தேவன் எப்போதும் கிரியை செய்துகொண்டிருக்கிறார். "இதோ இஸ்ரவேலைக் காக்கிறவர் உறங்குகிறதுமில்லை, தூங்குகிறதுமில்லை" அவர் ஒரு விநாடி என்னைக் கவனிக்கவில்லை என்றால் என் கதி என்ன? அவருடைய குமாரனாகிய கிருஸ்துவோ நன்மை செய்கிறவராகச் சுற்றித்திரிந்து நமக்காக ரத்தத்தை சிந்தி, இன்றைக்கும் பிதாவினிடத்தில் நமக்காகப் பரிந்துபேசிக்கொண்டிருக்கிறார் என் கர்த்தாவும் என் இரட்சகரும் எனக்காக விசேஷித்த கிரியைகளைச்செய்துகொண்டிருக்கும்போது தேவனுக்காக என் ஊழியம என்ன? எத்தன்மையது என்று பாாக்கும்போது, வேதனை உண்டாக்கும் வழிதான் நான் கடைப்பிடித்தது. அவருடைய ஊழியத்திற்கென்று என்னை தத்தம் செய்வேனாக.

ஆண்டவரிடத்தில் பெற்ற கிருபைகளை எண்ணிப் பார்ப்போம். பாவ அறிக்கை செய்து, மனந்திரும்பி தேவனின் பிள்ளையாக ஜீவிக்க இதுவே தருணம்.

இரட்சணிய யாத்ரீகம்

ஸ்ரீ எம். எஸ். ஜெயராஜ். வேதப்பாடசாலை, பசுமலை

"இரட்சணிய யாத்ரீகம்" இரட்சணிய யாத்ரீகம் என்றால் என்ன? ஆன்ம ஈடேற்றம் விரும்பியோருடைய உள்ளத்து, அப்பேறு லபிக்குமட்டாக, வைதீக மார்க்கத்து நிகழும் சிந்தா யாத்திரையின் ஆதியோடந்த

மான விருத்தாந்தங்களை விளக்கிக் காட்டும் ஓர் நூலே இரட்சணிய யாத்ரீகம்! என்ற புனித ஏடாகும்.

நான் ஏன் இப்பொருளைத் தெரிந்துகொண்டேன் என்பதற்கு சமீப கால நிகழ்ச்சி ஒன்றை உங்களுக்கு நினைவூட்ட விரும்புகின்றேன். நாமனை வரும் அறிந்திருக்கிறபடி சென்னை மாநிலத்தின் பிரபல தினச் செய்தி ஏடுகளான 'ஹிந்து, சுதேசமித்திரன்' என்பனவற்றின் ஆசிரியர் தம் பத்திரிகைகளில் ஒரு சமயம தமிழ்நாட்டுக்குப பணியாற்றிய மூன்று தமிழ் மணிகளைப்பற்றித் தீட்டியிருந்தார் அதில் நாடகத் துறையில் திரு. சுந்தரம் பிள்ளையும், தேசியத் துறையில் அமரகவி பாரதியாரும், மார்க்க ஈடேற்றத் துறையில் 'இரட்சண்ய யாத்ரீசம் 'இரட்சண்ய மனோகரம்' என்ற நூல்களை எழுதிய திரு கிருஷ்ணபிள்ளையும சிறந்தவர்கள் எனக் குறிப்பிட்டிருந்தார். பிரபல, இந்துமத அறிவாளி ஒருவர் 'இரட்சண்ய யாத்ரீகம்' தான் ஆன்ம ஈடேற்றம் தரும் சிறந்த நூல் என்று குறிப்பிடு வது, அந்நூலின் மகிமையும மேன்மையும் எவவளவு மகத்தானது என் பதை எடுததுக்காட்டுகிறதன்றோ! ஆகவேதான் அப்புண்ணிய காவியத் தைப்பற்றிக்கூற முற்பட்டேன்

இந்நூலின் ஆக்கியோன் யார்? இன் தமிழ் நாட்டின் தென்பகுதி யிலே உள்ள திருநெல்வேலி மாவட்டத்தில், அறிவுக்கூடங்கள் நிரம்பிய பாளையங்கோட்டை என்ற ஓர் அழகிய நகரம உண்டு அத்திருநகரின் கண், கடந்த நூற்றாண்டின் முற்பகுதியில்' வைராக்கிய வைணவ குடும்பம் ஒன்றில் தோன்றிய திரு. கிருஷ்ணபிள்ளை என்பவரே இரட்சண்ய யாத் ரீகத்தின் சிருஷ்டி கர்த்தா ஆவார். இவர் சிறந்த தமிழ் வித்துவான். இவரது தந்தையாரும் புலமை மிக்கவர். இவர் தம் 30ம் வயதில் எம்பெரு மான் இயேசு ரக்ஷகரால் தடுத்தாட்கொள்ளப்பட்டு அவரையே தம் குல குருவாகவும் ஏற்றுக் கொண்டார் எம்பெருமான் அருளைப்பெற்ற பிறகு இவர் தம் பெயரை ஹென்றி ஆல்பிரட் கிருஷ்ணபிள்ளை என வைத்துக் கொண்டார். எனினும், தமிழ்நாட்டார் இவரைக் கிருஷ்ணபிள்ளை என்றே கூறுவது வழக்கம் இயற்கையிலேயே தமிழில் பாண்டித்தியமுடைய கிருஷ்ணபிள்ளையவாகளின் கவிப் புலமையானது, எம்பெருமான் திருவரு ளால், ஆன்மீகத்துறையில் கட்டுறைகளாகவும், காவியங்களாகவும் பெருக் கெடுத்தோடியது இவர் தம் பாடல்களில் பக்திரசம் சொட்டும் படிப் போர் பாடுவோர் மனதைப் பரவசக் கடலில் ஆழ்த்தும். தன்னை மறந்து இயேசுபெருமானைக் காணவும், அவரோடு உறவாடவும் ஊக்கும். இலக்கண நிறைவும் இலக்கியச் செறிவும் நிறைந்தவை. இதுபற்றியே 'கிறிஸ்தவ கம்பா' என்ற சிறப்புப் பெயரும் பெற்றிருந்தார். இவர் தாம் இயேசு பெருமானால் தடுத்தாட்கொள்ளப்பட்ட விதத்தை அவர் கூறக் கேட்போம்.

பிறவியிற் பிடிவாத கொடிய வைணவனாய்ப்
  பிறந்து முப்பது வற்சரம்

பிரபஞ்ச மயல்கொண்டு மூடாந்தகாரப்
  பிழம்பி லடைபட்டுழன்று

மறவினைக் காளாகி நெறிநிலாத் தூர்த்தமன
  வாஞ்சைக் கிடங் கொடுத்து

மருளுற்று வறிதுநாட் செலவிட்ட நீசனெனை
  மலரடிக் காட் படுத்தி

குறைவிலாப் பேரருள் அளித்தின்று காறும்
  குறிக்கொண்டு காத்தி யெனினும்

கொச்சை மதியேற் கின்னும் நன்றி யறியாக் கெட்ட
  குணதோஷம் ஒழியவில்லையே

இறைவலப் புறமிருந் தடியருக்காய்ப் பரிந்
  தென்று மன்றாடு முகிலே

ஏக நாயக சர்வ லோக நாயக கிறிஸ்து
  ஏசு நாயக சுவாமியே—எனக் கூறுகிறார்.

இந்நூல் வந்த வரலாறு யாது? நாமறிந்திருக்கிறபடி உலகில் மிகவும் பெரும்பாலோரால் மதித்துப் போற்றிப் பாவித்து வருவது பரிசுத்த சத்திய வேதாகமமாகும். அதுவே மிகுதியான பாஷைகளில் மொழி பெயர்க்கப்பட்டுக் கோடிக்கணக்கான பிரதிகளாக விநியோகிக்கப்பட்டும் வருகிறது. அதற்கடுத்தாற்போல் பாவிக்கப்படுவது, ஆங்கிலேய பக்த சிரேஷ்டரான ஜான் பனியன் என்பவரால் ஆங்கிலத்தில உரை நடையில் எழுதப்பட்ட 'பில்கிரிம்ஸ் ப்ராகிரஸ்' (Pilgrims Progress) என்ற உன்னத நூலாகும். இதைத தமிழில் "மோட்ச பிரயாணம்" என்று கூறுவர். இந்நூலின் கருத்தைத் தழுவியேதான் கிருஷ்ணபிள்ளையவர்கள் "இரட்சணிய யாத்ரீகம்" என்ற நூலைத் தமிழில் காவிய நடையில தீட்டியுள்ளார்

இந்நூல் உணர்த்தும் மூலப்பொருள் என்னவெனில்: அநாதி நித்திய சுயம்புவாயும் நித்திய குணாள நின்மலராயும் வீற்றிருக்கின்ற திரியேக தெய்வமாகிய கடவுள் வேந்தன், ஆதியிலே புவனத்தையும் அதிலே தம் மக்களையும் உண்டாக்கி, அவர்களுக்கு நியமவிதி நிஷேதங்களையும் வகுத்துத்தந்து, சகல நன்மைகளையும் நாடோறும் நல்கிப் பராமரித்து வருங்கால், பரமராஜ்ய விரோதியான பைசாசத்தலைவன் நிலவுலகக் குடிகளையும் நிமலனை வழிபட்ட சந்ததி பரம்பரையினரையும் வஞ்சித்து, மருட்டி, துர்ப்போதனை யூட்டி, உலக சிற்றின்பங்களைக் காட்டி, பரலோகப் பிரமாணங்களை மீறும்படி ஏவி, தன் நாசகார ஆட்சியை ஸ்தாபித்து ஸ்திரப்படுத்த முயன்றான். இவ்வடாத செயலைப் பரலோக வேந்தன் அறிந்த மாத்திரத்தில் தம்மக்களை மீட்கக் கருதி ஏற்ற காலத்தில் தம் குமாரனாகிய இளவரசரை நிலவுலகத் தனுப்பி, அவர் மூலமாய்ப் பசாசையும் அவன் படையையும வென்று சுதர்மத்தை நிலைப்படுத்தி, பூர்வ ராஜ பாதையைப் புதுக்கி, அப்பாதை பிடித்துப் பரலோக யாத்திரை செய்வோருக்கு இறுதிவரை உறு துணைவராய் நின்று நித்திய பேரின்ப ராஜ்யத்தை அடைவிக்கிறார் என்பதாகும்.

இறுதியாக பிள்ளையவர்களின் கவி நயச்சுவைகளில் உங்கள் சிந்தனைக்கு விருந்தாக ஒரு சில பாக்களைக் கூறி முடிக்கின்றேன்.

காவியத்தின் கதாநாயகனுகிய கிறிஸ்தியான், தன் பாவப்பாரத்தை உணர்ந்தவனுக, செய்வது யாதென்று திகைக்கும் நிலையைக் காவியத்தில் ஓவியமாக்கிக் காட்டியிருக்கிருர். எவ்வாறு?

"வாடிய முகத்தன் சென்னி வணக்கியோன் மலங்கி வார் நீர்
ஓடிய விழியன் கந்தை உடையினன் ஒருங்கு பாவக்
கூடிய சும்மை தாங்கிக் கூனுறு முதுகன் பல்கால்
வீடிய நெறியை நாடும் விருப்பினன் வெருண்ட நெஞ்சன்"

பிறிதொரு இடத்தில்; தன பயணத்தில் எதிர்ப்பட்ட சுவிசேஷகன் என்னும் குருவானவரிடம் கதா நாயகன் தான் செல்லவேண்டிய வழி குறித்து:

"உய்வழி யிதுயிதென் உழறும் பல்வழி
பொய் வழி அவ்வழி போகுவே னல்லன்
தெய்வ நாயகன் திருநகர்க்குச செல்வழி
எவ்வழி அவ்வழி இன்னும தேர்கிலேன்"

—என வேண்டுகிருன்.

ஆத்ம விசாரியாகிய கதாநாயகனின் மேல் அனுதாபட் பட்ட குருவானவரும். இரட்சண்ய மூர்த்தியாகிய கிறிஸ்து பிரான் ஒருவரே பாவ விநாசக ரென்றும், அவரது பிராயச் சித்த மகத்தான புண்ணியமே அவனுக்கு நற்கதி பயக்குமென்றும் கூறி. மேலும் கதாநாயகன் தன் பயணத்தில் சோர்வடையாமல் முன்னேறிச் செல்லத்தக்கதாக அவனை ஊக்கும் நோக்குடன், அவன் அடையவேண்டிய இலக்கும், இயேசு பகவான் வாசஸ்தலமுமாகிய பரம பதத்தைப்பற்றி:

"முத்தி நகர், பரம பதம், திரு நாடு, திரு நகரம், மோக்ஷம், வீடு
நித்திய ஆனந்த பதம், நித்திய ஜீவக் கழகம், நிகில மூலம்,
உத்தம மங்களஸ்தானம், உன்னத மண்டலம், பரமாகாயத்துச்சி,
சத்ய மன்றம், புனிதமன்றம, தேவாலயம், பரம சந்நிதானம்"

—என்றும் கூறிச் சென்ருர்.

அவ்வாறே யாத்ரீகன் தன் பயணத்தில் எற்பட்ட பல இடையூறுகளையும் சோதனைகளையும் கடந்து, சத்விநய பக்தியுடன் முன்னேறி வருங்கால், பக்தவற்சலராகிய இயேசு ரக்ஷகர் தம ஐங்காயத் திருக்கோலத்துடன் பிரசன்னராகி, 'அஞ்சேல்' எனத் தம் திருக்கரம் நீட்டிப் பற்றி ஆதரவு தந்து, தம் சரணுர விந்த மோக்ஷ கதியை அவனுக்கு அருளுகினுர். யாத்ரீகனும் தானடைந்த மாபெரும் மோக்ஷானந்த நிலை குறித்து மட்டற்ற மகிழ்ச்சி கொண்டவனுய் எம்பெருமான் பாதார விந்த கமலஙகளைப் பற்றிக் கொண்டு:

"என்பு தோல் போர்தத யாக்கையைச் சத மென் றெண்ணி
யாத்துமத்தை எட்டுணையும்
முன் பி னெண்ணுது புரிந்த தீவினையென் முன்பு நின்றுடற்றலான்
முதிர் பேர்

இன்ப நாட்டரசே புண்ணியப் பொருப்பே யிரு நிலம் புதைத்
தெழுந் தோங்கும்
அன்பினர் கலியே நின்சரண் அடைந்தேன் அஞ்சலென்
றடைக்கல மருளே "

என அஞ்சலித்து நித்திய சாந்தி நிலை யடைகின்றான்

புனிதமானதும், பக்தியில் வளர்ப்பதும், ஆபாசக் கற்பனைகள் அற்றதும், தெய்வ சந்நிதிக்கு வழி நடத்துவதுமாகிய இப்பெருமை சாந்த நன்னூலை நீங்கள் அனைவரும் படித்து உணர்வதுடன், பிறரும் அதனால் நற்கதிப் பயன் அடையுமாறு நீங்கள் இருக்கும் இடமெல்லாம் பணியாற்ற உங்களைப் பணிவன்புடன் கேட்டுக் கொண்டு முடிக்கின்றேன்.

வேத வினாக்களுக்குரிய விடைகள்.

1. மூவாயிரம். 1 ராஜாக்கள் 4 : 32
2. எரேமியா. 31 : 15
3. அர்கெலாயு. மத். 2 : 22.
4. யாத்திராகமம் 20 : 1—17. உபாக'மம் 5 : 6—21.
5. நியாயாதிபதிகள். 4 : 5.
6. கீஷின் குமாரன் சவுல். I சாமு. 9 :1—2
7. ஏசாயா. 3 : 16—24
8. ஓபேத் ஏதோம். I நாளாகமம் 13 : 14
9. II ராஜா. 3 : 6—27
10. யாக்கோபு 1 : 27
11. வெளி. 2 : 4
12. மாற்கு. 16 : 9

இயேசுவின் ஜெபப்பள்ளி

இருபதாம் பாடம்

'பிதா மகிமைப்படும்படியாக'

அல்லது

ஜெபத்தின் முக்கிய முடிவு

'நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால்............... நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக, அதைச் செய்வேன்' (யோவான் 14 : 12, 13)

குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக :

மகிமையின் சிங்காசனத்தில் வீற்றிருக்கிற நமதாண்டவர் அவர் நாமத்தினாலே நாம் கேட்கிற யாவற்றிற்கும் 'குமாரனில் பிதா மகிமைப்

படுவதான' இந்தக் குறிக்கோள் நிறைவேறுமாறே பதிலருள்வார். ஜெபத்திற்கு அவர் அருளும் ஒவ்வொருபதிலும் இக்குறிக்கோளையே பொருத்திருக்கும் இந்தக் குறிக்கோள் இல்லாத ஜெபத்திற்குப் பதிலருளமாட்டார். எனவே நமது விண்ணப்பங்களில் இதுவே மெய்யப்பொருளாயிருத்தல் வேண்டும். அதுவே இயேசுவின் ஜெபத்தின் முடிவாயிருந்தது. பிதா மகிமைப்படுவதே நமது ஜெபத்தின் நோக்கமும், முடிவுமாயிருத்தல் வேண்டும் அதுவே நமது ஜெபத்தின் ஆத்துமாவாகவும் உயிராகவும் இருத்தல் வேண்டும்.

இயேசுவின் மாமிச நாட்களில் இவ்வாறே இருந்தது. 'நான் எனக்கு மகிமையைத் தேடுவதில்லை, என்னை அனுப்பினவருடைய மகிமையையே தேடுகிறேன்' இதுவே அவரது வாழ்க்கையின் இரகசியம். 'உம்முடைய குமாரன் உம்மை மகிமைப்படுத்தும்படிக்கு நீர் உம்முடைய குமாரனை மகிமைப்படுத்தும்' (யோவான் 17: 2) 'பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தினேன்—இப்பொழுது நீர் என்னை உம்மிடத்தில் மகிமைப்படுத்தும்' (யோவான் 17 : 4) என்று தமது பிரதான ஆசாரிய ஜெபத்தில் கூறுகிறார். பிதாவின் மகிமைக்குள் தாம் எடுத்துக்கொள்ளப்படுவதற்கு இரு காரணங்கள் கூறுகிறார் ஒன்று பூமியிலே பிதாவை அவர் மகிமைப்படுத்தினது. மற்றொன்று பரத்திலும் பிதாவை மகிமைப்படுத்துவேன் என்பது. பிதாவை இன்னும் மகிமைப்படுத்துவதனையே அவர் வேண்டுகிறார். எனவே இயேசுவின் இரக்கத்திற்குள் பிரவேசித்து, பிதாவை மகிமைப்படுத்துவதே நமது ஜெபத்தின் முக்கிய நோக்கம் என்று அவரைத் திருப்தி செய்வோமாயின், நமது ஜெபத்திற்குப் பதில் நிச்சயமாயக் கிடைக்கும். பிதாவை மகிமைப்படுத்துவதாகிய அவரது நோக்கத்தையே நமது நோக்கமாகக் கொள்வோமாக நமது ஜெபத்தையும் அவரது பதிலையும் இணைக்கிற சங்கிலிக் கண்ணாக பிதாவின் மகிமை இருப்பதாக.

இயேசுவின் இவ்வார்த்தை இருபுறமுங் கருக்குள்ள பட்டயம் போன்றது. இருதயத்தின் விருப்பங்களைப் பரிசோதித்தறியத்தக்கதாக ஆன்மாவையும், ஆவியையும் ஊடுருவிச செல்லும் ஈட்டிபோன்றது பூமியிலே ஜெபித்த ஜெபங்களிலும், பரத்திலே பரிந்து பேசும் ஜெபங்களிலும், அங்கிருந்து அவர் நமக்குப் பதிலருளும் வாக்குத்தத்தத்திலும், பிதா மகிமைப்படுவதனையே அவரது முதற்குறிக்கோளாக வைக்கிறார். நமக்கும் அதுவே மாதிரி. ,நம் இஷ்டப்படி ஜெபிப்பதும், நமது சுயமகிமையை நாடுவதும் நம் ஜெபங்களில் அடிக்கடி பிரதான இடம் பெறுகின்றனவன்றோ? 'பிதா மகிமைப்படுவதே, நமது ஜெபத்தின் குறிக்கோளாயிருப்பதாக'.

கடவுளை மகிமைப்படுத்துவதாவது யாது?

நாம் ஜெபிக்க ஆயத்தப்படும்போது நாம் கடவுளுக்குத் தருகிற துதியும் தோத்திரமும் கடவுளை மகிமைப்படுத்துவதாகாது. நமது முழு வாழ்க்கையின் பல அம்சங்களையும் கடவுளின் மகிமைக்காக ஒப்புக்கொடுக்கும் போது மட்டுமே நாம் கடவுளை மகிமைப்படுத்துமாறு ஜெபிக்க முடியும். 'கடவுளின் மகிமைக்கென்றே எல்லாவற்றையும் செய்யுங்கள்'. 'கடவுளின் மகிமைக்கென்றே எல்லாவற்றையும் கேளுங்கள் என்ற இவ்விரு

கற்பனைகளும் இணைபிரியாதவை. இவை இரட்டைக் கற்பனைகள். இவற்றுள் முதற் கற்பனைக்குக் கீழ்ப்படிவதே இரண்டாங்கற்பனையால் பெறப்படும் கிருபைக்கு இன்றியமையாதது. கடவுளின் மகிமைக்காக வாழும் வாழ்க்கையே நமது ஜெபங்களுக்குப் பதில் கிடைப்பதற்குரிய நிபந்தனை

இது நேர்மையும் இயற்கையுமானது. தேவனிலும் அதிக மகிமையுள்ளவர் எவருமிலர் அவரது மகிமையேயல்லாது வேறொரு மகிமை கிடையாது. சிருஷ்டிகள் அவரது மகிமையை வெளிப்படுத்துகின்றன. 'வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறதன்றோ. (சங். 19 : 1) அவரது மகிமைகென்றிராத சருவ சிருஷ்டிகளும், பாவமும், இருளும், மரணமுமுடையன கடவுளை மகிமைப்படுத்துவதன் மூலமே சிருஷ்டிகள் தங்களை மகிமைப்படுத்த வியலும். பிதாவை மகிமைப்படுத்துவதற்காக, மனுஷகுமாரன் செய்தவைகளும், தம் முழு வாழ்க்கையையும் முற்றும் ஒப்புக்கொடுத்ததும் நமக்கு முன்மாதிரி. கிறிஸ்துவின் அடியானுக்கும் கிறிஸ்துவின் வெகுமதி கிடைக்கும். ஏனெனில், அவர் தமது பிதாவின் மகிமைக்காகத் தம்மையே முற்றும் ஒப்புக்கொடுத்ததால், அவரை கனத்தோடும் மகிமையோடும் பிதா முடிசூட்டினர். அவரது திருக்கரங்களிலே கடவுள் இராஜியத்தையே ஒப்படைத்தார் பரிந்து பேசுகிறவர் என்ற முறையில் அவர் விரும்பினதைக் கேட்கும் உரிமையும், நமது ஜெபங்களுக்குப் பதிலருளவும் அவருக்கு வல்லமை அளித்தார். இதில் நாம் கிறிஸ்துவோடு ஒன்றுபடும்போதும், கடவுளின் மகிமைக்கென்றே முற்றும் ஒப்புக்கொடுக்கப்பட்ட நம் வாழ்க்கையில், ஜெபமும் ஒரு பகுதியாயிருக்கும்போதும், 'எதைக் கேட்பீர்களோ! அதை நான் செய்வேன்' என்ற வாக்கினை நிறைவேற்றி, நமது இரக்ஷகர் பிதாவை மகிமைப்படுத்துவார்

கடவுளை மகிமைப்படுத்துவதையே இலக்ஷியமாகக் கொண்ட அத்தகைய வாழ்க்கையை நமது சுயமுயற்சியால் நாம் அடைய முடியாது. அத்தகைய வாழ்க்கை கிறிஸ்து இயேசுவில்தான் காணமுடியும். அவா வாழ்க்கையே நம வாழ்க்கை. நமக்காக அவர் தம்மை ஒப்புக்கொடுத்தார். இப்பொழுது நமது உயிரும் அவரே. நம் வாழ்க்கையும் அவரே. கடவுளின் ஸ்தானத்தைக் கொள்ளையாடுகிற 'நான் நான்' என்ற அகங்காரத்தையும், 'எனது' என்ற மமகாரத்தையும், கண்டுபிடித்து, அறிக்கையிட்டு அவற்றை வெறுப்பதும், நம்மால் செய்யமுடியாது. ஆனால், கிறிஸ்து இயேசு நம்முள் குடிபுகுந்து, வசித்து, நம் இதய பீடத்திலமர்ந்து ஆட்சிசெய்யும்போதுதான் அது முடியும். நமது ஜெபங்களைக் கேட்பதன மூலம் பிதாவை மகிமைப்படுத்துகிற இயேசுவே கடவுளின் மகிமைக்கென்று நாம் வாழவும், கடவுளின் மகிமைககாக நாம் ஜெபிக்கவும் கற்பிப்பார்.

இது நம்மில் கிரியை செய்யும்படி செய்வது எது? கடவுள் எத்துணை மகிமையுடையவர் என்பதையுணர்வதே போதும் இதற்கு. அவர்முன் சரணடையவும், இராஜியம் வல்லமை, மகிமை ஆகியவை அவருக்கே உரியன என்றுணரவும், என்றும் ஆசியும் அன்பும் நிறையப் பெற்றவராய் அவரது ஒளிக்குள் வாழ நம்மை நாமே ஒப்புக்கொடுக்கவும் கற்றுக்கொள்வோமாக, அவருக்கே மகிமை என்று கூறவும், கடவுள் மகிமையைத்தவிர வேறெதனையும் காண விரும்பாத வாழ்க்கைக்காக நாம் வேண்டுதல் செய்யவும்,

ஆண்டவரை நோக்கிப் பார்ப்போமாக. கடவுளின் மகிமைக்காக வேண்டி நாம் நன்கு ஜெபிக்கக் கற்போமாக.

நாம் எத்தனையோ தடவைகளில், நமது தேவைகளுக்காகவோ, பிறர் தேவைகளுக்காகவோ, சிநேகிதருக்காகவோ சபைக்காகவோ, நமது ஊழியத்திற்காகவோ, கடவுள் மகிமைப்படுவதைப் பெரிதாய்க்கருதாது ஜெபித்துளோம் அதனால் அவற்றிற்குப்பதில் பெறாமல் போனதில் வியப் பொன்றுமில்லை -டவுளின் மகிமையைப் பிரதானமாய்க் கொள்ளாததே அதற்குக்காரணம். விசுவாசத்துடன் ஜெபிக்கும் ஒருவன், அவனில் எல்லா வற்றிலும் கடவுள் மகிமைப்படும்படி வாழுமாறு தன்னை முழுவதும் ஒப்புக் கொடுக்கவேண்டும் இதுவே அவன் குறிக்கோளாயிருத்தல்வேண்டும் இதில்லாதது விசுவாசமுள்ள ஜெபமாகாது 'தேவனாலே மாத்திரம் வருகிற மகிமையைத்தேடாமல், ஒருவர்க்கொருவர் மகிமையை ஏற்றுக் கொள்ளுகிற நீங்கள் எப்படி விசுவாசிப்பீர்கள்?' என்று ஆண்டவர் சொன்னாரன்றோ? (யோவான் 5 : 44) எனவே மனிதரால் வரும் மகிமையையே நாடுகிற நமக்கு விசுவாசம் இருப்பது அசாத்தியம். எனவே விசுவாசமுள்ள ஜெபமும் இருக்கமுடியாது. தனது சுயமகிமையைத்துறக் கிறதும் கடவுளுடைய மகிமையைமட்டும் நாடுகிறதுமான, ஆழ்ந்த, உண் மையான சுயதியாகமே விசுவாசம். கடவுளின் மகிமையை நாடி சாணர்த்தி செய்வதும், நமக்குச் செவிகொடுத்து நமக்கு அவர் மகிமையைக் காட்டுவார் என்று எதிர்நோக்குவதுமாகிய இரண்டும் ஒரே வேரில் தோன்றிய இரு கிளைகள் கடவுளின் மகிமையைத் தேடுகிறவன்மட்டுமே தனது ஜெபத் திற்குரிய பதிலைப் பெறுவான்.

அதனை எப்படி அடைவது? முதலாவது பாவ அறிக்கைசெய்க. கடவுளின் மகிமைக்காக அக்கறை கொண்டோமில்லை. நமது வாழ்வும் ஜெபதபங்களும் கடவுளை மகிமைப்படுத்துபவைகளாகவுமில்லை. கடவுளுக் காகவும், கடவுள் மகிமைக்காகவும் குமாரனின் சாயலில் வாழ்ந்தோமில்லை. இப்பாவங்களை எமக்குப் பரிசுத்தாவியானவர் வெளிப்படுத்துமாறு காத் திருப்போமாக. இதனைப்பற்றிய மெய்யறிவும் பாவ அறிக்கையுமே இரக்ஷிப் பிற்கு நம்மை நடத்தும் உறுதியான நெறிகள்.

இயேசுவை நோக்கிப்பார்ப்போமாக. எவ்வித மரணத்தால் கடவுளை நாம் மகிமைப்படுத்த முடியும் என்பதை அவரில் நாம் காணக்கூடும். மரணத்திலே அவர் கடவுளை மகிமைப்படுத்தினார், மரணத்தின் மூலம் கடவுளோடு அவர் மகிமைப்பட்டார். 'கர்த்தராகிய இயேசுவினுடைய ஜீவனும் எங்கள் சரீரத்திலே விளங்கும்படிக்கு, இயேசுவின் மரணத்தை எப்பொழுதும் எங்கள் சரீரத்தில் சுமந்து திரிகிறோம். எப்படியெனில், சாவுக்கினமான எங்கள் மாம்சத்திலே இயேசுவினுடைய ஜீவனும் விளங் கும்படிக்கு உயிரோடிருக்கிற நாங்கள் எப்பொழுதும் இயேசுவினிமித்தம் மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கப்படுகிறோம்' என்று பரி. பவுல் கூறுவதைக் கவனியுங்கள் (IIகொரி. 4: 10, 11) நமது சுயம் (self) சாவதன் மூலமும், கடவுளுக்காக வாழ்வதன் மூலமுமே நாம் கடவுளை மகிமைப்படுத்த முடி யும் இதுவே கிறிஸ்துவுக்குள்ளிருப்பதும் பிழைப்பதுமாகும். இதுவே நமது தினசரி வாழ்வின் ஜீவநாடியாகுக. கிறிஸ்து செய்ததுபோல, கடவுளின மகிமைக்காக வாழ விரும்புவோமாக. உறுதி கொள்வோமாக. கிறிஸ்து வின் வாழ்க்கையும் பலமும் நமக்குள் கிரியை செய்ய அனுமதிப்போமாக.

கிறிஸ்து நமக்குள்ளிருப்பதால் நாம் கடவுளுடைய மகிமைக்கென்றே வாழ முடியும் என விசுவாசிப்போமாக 'எல்லாம் கடவுளின் மகிமைக்கே' என்பதே நமது தினசரி வாழ்வின் மந்திரமாகுக

'குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக அதைச் செய்வேன்' என்ற ஆண்டவரின் அமுத வாக்கை அருளும் அவரோடு ஐக்கியப்படுவோமாக அப்போதுதான் நமது ஜெபங்களில் சமாதானமும், வல்லமையும் விளங்கும். சத்திய வசனத்திற்கும், பரிசுத்தாவிக்கும் நம்மை முற்றும் ஒப்புக்கொடுக்கும்போது நமது விருப்பங்கள் அனைத்தும் அவருடைய விருப்பங்களாகும் நமது விருப்பங்களாயிரா கடவுளின மகிமையே அவ்விருப்பங்களின் குறிக்கோளாயிருக்கும். அப்போது 'பிதாவே இவற்றை உமது மகிமைக்காகவே வேண்டுகிறோம்' என்பதை நீர் அறிவீர்! என்று சொல்லும் பாத்தியதை கிடைக்கும் ஜெபத்தின் நோக்கம் பிதாவை மகிமைப்படுத்துவதேயல்லாது வேறொதுவுமில்லை என்ற அறிவு நமக்கு வந்துவிட்டால், ஒரு பருவதத்தில் ஏறுவதுபோல் ஜெபமிராது. நமது ஜெபம் நிச்சயமாய்க் கேட்கப்படும் என்ற பெருத்த நம்பிக்கையை நமக்குண்டாக்கும். மேலும் ஜெபிக்கும் சிலாக்கியம் இரண்டத்தனையாகும் ஏனெனில், 'நீங்கள் என் நாமத்தினாலே எதைக்கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக அதைச் செய்வேன்' என்பதில் பங்காளிகளாகும் சிலாக்கியம் பெறுகிறோம். அத்துடன் பிரிய குமாரனோடு ஐக்கியப்படுகிறோம்

கி. மு. சங்கப் பொருட்கள்—ஜூன் 1955.

இயேசு ஜீவனோடிருக்கிறார்.

ஜூன் 1. தேற்றரவாளன் மூலம் — யோவான் 14 : 15-31
2. ஒப்படைக்கப்பட்ட வாழ்க்கையின் மூலம் — அப் 4 : 13-22
3. திருச்சபையின் மூலம் — எபேசி 1 : 15-23
4. வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுதல் மூலம் — லூக் 24 : 49-53; அப் 2 : 1-4
5. இயேசு ஜீவித்திருக்கிறார் எப்படி? — அப் 9 : 1-9; கலா 2 : 19-20

தற்பிரதிஷ்டை—என் ஜீவியத்தை ஆளும் (5) என் உதடுகள்

6. பொய் உதடுகள் — சங் 31 : 14-19
7. நன்றியுள்ள உதடுகள் — சங் 119 · 169-176
8. கனயீனமான உதடுகள் — ஏசாயா 29 : 13-14
9. ” ” — மத் 15 : 1-9
10. காக்கப்பட்ட உதடுகள் — 1 பேதுரு 3 : 8-13
11. இயேசுவின் உதடுகள் — யோவான் 3 : 1-17
12. தற்பிரதிஷ்டை—என் ஜீவியத்தை ஆளும் (5) என் உதடுகள் — ஏசாயா 6 : 1-13

நமது உடன்படிக்கை (9) என் கூட்டாளிகள்.

13. வாக்கில் உண்மை — மத் 21 : 28-31
14. பல வித வரங்கள் — எபே 4 : 1-12
15 உண்மையான ஊழியத்தின் பலன் — மத் 20 : 1-16
16 ஊழியத்தில் உடன் வேலையாட்கள் — 2 கொரி 6 : 1-10
17. தரிசனமுள்ள ஆட்கள் — யோவான் 4 : 34-38
18. இடைவிடாத ஜெபம் — அப் 12 : 1-17
19. நமது உடன்படிக்கை (9). என் கூட்டாளிகள் — 1 கொரி 3 : 1-23

நமது உடன்படிக்கை. (10). தற்பிரதிஷ்டைக்கூட்டம்.

20 புதிய ஜீவியம் — ரோமர் 6 : 1-6
21. கடவுளைச் சார்ந்திருத்தல் — மத் 6 : 24-34
22. விசுவாசத்தில் உறுதி — எபி 10 : 16-25
23. தற்பிரதிஷ்டை — ரோமர் 12 : 1-3
24 கிறிஸ்துவின் முன் மாதிரி — மத் 3 : 13 4 : 1
25 சமூகமாய் சமர்ப்பித்தல் — யோவான் 12 : 21-28
26 நமது உடன்படிக்கை (10) தற்பிரதிஷ்டை — மல் 3 16-18

புறதேச தரிசனம் (2). தனித்த ஆளில்.

27. என்னை அனுப்பும் — ஏசாயா 6 : 1-8
28 நான் சிறுவன் — எரேமியா 1 : 1-10
29. பயப்படாதே — எசே 2 : 1-7
30 விடுவிக்க வல்லவர் — தானி 6 : 18-28

வேதவினாக்கள்

1. சாலமோன் மொழிந்த நீதிமொழிகள் எத்தனை ?
2. பெத்லெகேமில் சிறுவர் கொலை செய்யப்படுவதைப்பற்றி எந்த தீர்க்கதரிசி முன்னறிவித்தார் ?
3. பெரிய ஏரோதுக்குப் பின் வந்த யூதேயா அரசன் யார் ?
4. எந்த இரண்டு புஸ்தகங்களில் பத்துக் கற்பனைகள் வருகின்றன ?
5. பேரீச்ச மரத்தின் கீழே குடியிருந்த தீர்க்கதரிசினி யார் ?
6 இஸ்ரவேலின் முதல் அரசன் யார் ? யாருடைய மகன் ?
7. பெண்கள் உடுப்பின் முழுப் பட்டியல் வேதத்தில் எங்கே காணப்படுகிறது ?
8. மூன்று மாதம் உடன்படிக்கைப் பெட்டியை வைத்திருந்தால் ஆசீர்வதிக்கப்பட்டது யார் ?
9. மூன்று அரசர்களைக் காப்பாற்ற எலிசா தீர்க்கதரிசி செய்த அற்புதம் என்ன ?
10. பரி. யாக்கோபு மார்க்கத்தைப்பற்றி தருகிற வரையறை வாக்கியம் என்ன ?
11. ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டு விட்ட சபை எது ?
12. உயிர்த்தெழுந்த கிறிஸ்து யாருக்கு முதலாவது தரிசனமானார் ?

பரிசுத்த ஜீவியம்

(ஆசிரியர் L. செல்வநாயகம், உத்தமபாளையம்.)
(யாத்தாடப் பாராதேனோ-என்ற மெட்டு)

பல்லவி

பரிசுத்த ஜீவியம் செய்வோம்-சகோதரரே
பரிசுத்த சேவையில்உய்வோம்.

அ.ப.

பரிசுத்த ஜீவியமே பரம பிதாவிரும்பும்
உரிய சேவையதையே
உணர்ந்து உவந்து நாளும்— பரி.

சரணம்

1

கேடான பாவங்கள் விட்டு-பரிசுத்தத்துக்
கீடான பாதையைக் கிட்டு.
வாடா ஜீவகிரீடம் வந்துஉனையேகிட்டும்
கோடா கோடி சத்யங்கள்
கூவி அழைக்கும் நல்ல— பரி.

2

ஒன்றான மெய்த்தேவனில்-ஒன்றித்திருந்து
மன்றாடி வணங்கியே நின்று
குன்றா அருள் மாரியை வென்றியுடனே பெற்று
என்றென்றும் அவர்க் கேற்ற
நன்றியுள்ள பிள்ளையாய்— பரி.

3

நித்தம் வேதவாசிப்போடு-ஜெபதபங்கள்
நித்திய கீர்த்தனை பாடு.
சுத்தன் கிறிஸ்துபோலே சுயமாய் விளங்குங்காலே
வத்தா நீர்க்கால் மரம்போல்
வளர்வோமே மேலும் மேலே— பரி.

தொழில் கற்பதற்கு அரிய சந்தர்ப்பம்

14 முதல் 18 வயது வரையுள்ள வாலிபர்கள் பின்வரும் தொழில்களைக் கற்கலாம்.

அச்சுவேலை, புஸ்தகம் கட்டுதல்
மின்சார, இயந்திர வேலைகள்
தச்சு வேலை

படிப்பு விபர விளம்பரத்திற்கு மதுரை ஜில்லா பசுமலைக் கைத் தொழில் பாடசாலை மானேஜருக்கு அணா 1 முத்திரை அனுப்பிப் பெற்றுக் கொள்ளவும் சேர்க்கை விண்ணப்பம் ஜூன் மாதம 15ம் தேதிகுள் மானேஜருக்குக் கிடைக்கவேண்டும.

எல்லாத் தொழில்களையும் படிக்கவேண்டிய காலம் 3 அல்லது 4 வருஷமாகும். படிப்பதற்குச் சம்பளம் கட்டவேண்டியதில்லை. எல்லா மாணவருக்கும் சம்பளம் கொடுக்கப்படும் தச்சுவேலை கற்பதற்குக் குறைந்தது 5-ம் வகுப்பாவது தேறியிருக்கவேண்டும். இயந்திரவேலை, மின்சாரவேலை, அச்சுவேலை பயில்வதற்கு 8வது வகுப்பு வரையிலாவது 3-ம பாரம் வரையிலாவது படித்த மாணவர்கள் முதலில் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

உண்மையோடும் உற்சாகத்தோடும வேலை செய்கிற தகுதியுள்ள எளிய மாணவர்களுக்கு சம்பளத்துக்கு (Stipend) மேல் செல்லும் தங்கள் செலவைச் சமபாதிக்கத் தோட்டவேலையாவது வேறு வேலையாவது கொடுக்கப்படும்.

தொழில் கற்றுக்கோள்ளுங்கள்
பிழைப்பதற்கும் கடவுளுக்குத் தொண்டு செய்வதற்கும்
அதுவே சிறந்தவழி.

விளம்பரம்

வேத பாடசாலை, பசுமலை.

வருகிற ஜூன்மீ 29மட முதல் வேதப்பாடசாலையின் அடியிற் கண்ட வகுப்புக்கள் ஆரம்பிக்கும் :—

1 இரண்டு வருட வேதாகம ஸ்திரீ வகுப்பு. குறைந்த பட்சம் 8ம் வகுப்பாவது படித்திருப்பது நல்லது. வயது 20க்கு மேல் இருக்கவேண்டும. குறைந்த படிப்பாயிருந்தாலும் அனுபவமும் திறமையுமுள்ளவர்கள் சேர விரும்பினல் கவனிக்கப்படும.

2 ஒரு வருட உபதேசிமார் வகுப்பு 8ம் வகுப்பு பாஸ்பண்ணி போதனைமுறைப் பயிற்சியும் சபை அனுபவமும உள்ளவர்களாயிருக்கவேண்டும். குறைந்த படிப்பாயிருந்தால் சபை அனுபவமும் திறமையும வேண்டும.

சேர விருமபுகிறவர்கள் தங்கள் தங்கள் வட்டகையிலுள்ள லோக்கல் கவுன்சில் தலைவர்கள் மூலமாய் மனுப்பண்ணலாம். அப்ளிக்கேஷன் பாரம் வேண்டியவர்கள் பசுமலை வேதப்பாடசாலைத் தலைவருக்குஎழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

பந்தயக் கதைப்போட்டி

பரிசு வாங்க முன் வாருங்கள்! எல்லாரும் இதில் பங்கெடுக்கலாம்!

முதல் பரிசு	ரூ. 20
இரண்டாம் பரிசு	ரூ. 15
மூன்றும் பரிசு	ரூ 10
நான்காம் பரிசு	ரூ 5

விதிகள்

1. இளைஞருக்குப் பொருத்தமான கதையாயிருக்கவேண்டும்.
2. கிறிஸ்தவ குணசீலம் என்ற பொருளின் மேல் கதை அமைந்திருக்கவேண்டும்
3. தானே சுயேச்சையாய் எழுதுகிற கதையாயிருக்கவேண்டும். காப்பியண்ணின கதையாயிருக்கக்கூடாது
4. 1000 வார்த்தைகளுக்குமேல் எழுதக்கூடாது.
5. முழுக் காகிதத்தில் ஒருபக்கம் மாத்திரம் தெளிவாய் எழுதவும்
6. நியாயாதிபதிகளின் தீர்ப்பே முடிவானது.
7. தெரிந்தெடுக்கப்பட்ட கதைகள் அத்தியட்சாதீனப் பத்திரிகை "சத்தியவர்த்தமானி"யில் பிரசுரிக்கப்படும்.
8. எல்லாக் கதைகளும் நூல் கழகத்திற்குச் சொந்தமாகும்.
9. கதைகளை "ஏ சாமுவேல் ஐயர், வேதப்பாடசாலைத் தலைவர், பசுமலை" என்ற விலாசத்திற்கு ஜூலை 1, 1955க்கு முன் அனுப்பிவைக்கவும்.

Lenox Press, Pasumalai 3—6—1955 481 C.